மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அவர்கள் இந்தக் கோரிக்கையை உணர்ந்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. இதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாணவ மாணவியர்கள் விடுதிகளில் இருக்கின்ற காப்பாளர்கள் ஒரு சில பேர், எல்லோரும் செய்யவில்லை, ஏதாவது ஒரு தவறு செய்கிறார்கள். அப்படி என்னுடைய பகுதியில் நம்பியூர் ஆதிதிராவிடர் மாணவர்கள் இல்லத்திலே ஒரு தவறு நடைபெற்று அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்தவுடன் அவர் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவரை சஸ்பெண்ட் செய்து நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அதற்கு இந்த நேரத்திலே அவருக்கு நன்றி சொல்வதோடு அப்படிப்பட்டவர்கள் மீண்டும் அந்தப் பணியில்—வேறு இடங்களில், கோர்ட்டுக்கோ மற்ற இடங்களுக்கோ சென்று— மீண்டும் அவர்கள் ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் கழித்து விடுதிக் காப்பாளராக தொடர்ந்து வராமல், வேறு பணிகளுக்கு அவர்களை மாறுதல் செய்ய மாநில அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற தவறுகள் செய்யும் காப்பாளர்களை மீண்டும் அப்பணியில் அமர்த்தாமல் அரசு ஆசிரியர் பணியில் அமர்த்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 39, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

39—

இராதாபுரம் இடிந்தகரையில் மாதிரி மீன் பிடி கிராமம் செயல்படுத்தும் திட்டம்

*13797—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 பிப்ரவரி 9]

(அ) ராதாபுரம் தொகுதி இடிந்தகரையில் மாதிரி மீன்பிடி கிராமம் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்ற தொடர் கூட்டத்திலே, இது குறித்து நான் கேள்வி எழுப்பி இருந்தபோது, பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருந்தார்கள். எனக்கும் பதில் வந்திருந்தது. அடுத்த ஆண்டு நிச்சயமாக தரப்படுமென்று பதில் வந்திருந்தது. ஆகவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து இந்த நிதியாண்டிலே இந்த இடிந்தகரைக்கு மாதிரி மீன்பிடி கிராமம் என்ற திட்டத்தைத் தர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டைப் பொறுத்த மட்டில் இடிந்தகரையில் 100 வீடுகள் கட்டித்தர உத்திரவிடப் பட்டுள்ளது. மாதிரி மீனவர் கிராமம் எனும்போது, இலவசமாக அந்த கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தேவையான தளம் கொடுக்கும் பட்சத்திலே இக்கிராமத்தில் சமுதாயக் கூடம் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படு வதன் மூலம் இந்தப்பணி நிறைவேற்றப்படும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் தருவதற்கு மக்கள் அங்கே தயாராக இருக் கின்றார்கள். ஆனால் அங்கே நீர் உப்பு நீராக இருக்கின்ற காரணத்தால், அந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத் தின் மூலமாக தாமிரபரணி ஆற்று நீர் வந்தால்தான் அந்த நீர்ப் பிரச்சினையை அங்கே தீர்க்க முடியும். ஆகவே அந்த கம்யூனிட்டி ஹாலையாவது கட்டித்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

40—

கரூரில் புதிய தொழிற்பேட்டை அமைத்தல்.

*10309—திரு ம. சின்னசாமி:

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரில் ஏற்கனவே அமைக் கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் விரிவாக்கம் செய்வதற்கான இட வசதி இல்லாததால் தனியே கரூர் வட்டத்தில் ஆத்தூர் கிராமத்தில் 38.33 ஏக்கர் நிலம் தொழிற்பேட்டை அமைப்பதற் காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப வசதிகளுடன் கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படு கிறது.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டாவது கட்டமாக ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்களை அதாவது ஷெட்டுகளை அரசினுடைய செலவில் கட்டிக் கொடுத்தால்தான் அந்த ஷெட்டுகளை வாங்குவதற்கு தொழில்